பொருள் எண்.1

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு துப்புரவு பணியாளர்கள் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 50 ஆகும். தற்போது 39 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். 11 பணியிடங்கள் காலியாக உள்ளது. தற்போது உள்ள துப்புரவு பணியாளர்கள் 39 பேரில் மாற்றுப் பணியாக குடிநீர் பிரிவில் – 9 பேர், ஒட்டுநர்–2 பேர், அலுவலக பணிக்கு – 7 நபர், பேருந்து நிலையக் கட்டண வசூல் பணிக்கு ஒரு நபர், தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு ஒரு நபர், இரவு காவலர் பணிக்கு ஒரு நபர் ஆக 21 நபர்கள் மாற்று பணி பார்த்து வருகிறார்கள். மீதமுள்ள 18 துப்புரவு பணியாளர்களை கொண்டு 24 வார்டுகளிலும் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட விதிகளின்படி, மட்கும் குப்பை, மக்காத குப்பைகள் என தரம் பிரித்து வீடு வீடாக சென்று தரம் பிரித்து வாஙகப்பட வேண்டி உள்ளதாலும் வாறுகால்கள் சுத்தம் செய்யவும், தெருக்களை சுத்தம் செய்யவும் 18 பணியாளர்களைக் கொண்டு நகரின் தூய்மை காக்க இயலாத நிலை உள்ளது. எனவே நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை அரசாணை (நிலை) எண்.101 நாள் : 30.04.1997–ன் படி துப்புரவு பணியாளர்கள் பணியிடஙகளை தோற்றுவித்துக் கொள்ளவும் (250 வீடுகளுக்கு 3 துப்புரவு பணியாளர்கள் வீதம் பணி அமர்த்திக் கொள்ள அளவுகோல் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் மொத்தம் 6800க்கு மேற்பட்ட வீடுகள் உள்ளது. அளவுகோல்படி 82 துப்புரவு பணியாளர்கள், உரக்கிடஙகு பணிக்கு – 5 பேர், டிப்பர் லாரி– 3 பேர், பேருந்து நிலையம் சுத்தம் செய்ய – 2 பேர், டிப்பர் ஆட்டோ – 4 பேர், தினசரி சந்தை சுத்தம் செய்ய – 2 பேர், மற்றும் Bio Methanisation Plant – 2 பேர் ஆக மொத்தம் 100–பேர் தோற்றுவித்துக் கொள்ளலாம். இந்நகராட்சியில் 50 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசாணையின் 101 விதிகளின் படி 50 கூடுதல் பணியிடஙகளும் 11 காலிப்பணியிடங்கள் ஆக மொத்தம் 61 பணியிடங்கள் நிரப்ப வேண்டிய அவசியம் உள்ளது. எனவே திடக்கழிவு மேலாண்மை பணிகள் வாறுகால்கள் சுத்தம் செய்தல், தெருக்கள் சுத்தம் செய்தல் ஆகிய பணிகளை தொய்வின்றி மேற்கொள்ள வேண்டிஇருப்பதால் பொது சுகாதார நலன் கருதி இந்நகராட்சிக்கு 40 துப்புரவு பணியாளர்களை Out sourcing மூலம் பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி பட்டியலின் படி பணிகளை மேற்கொள்ள நகராட்சிக்கு நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெறுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1368/2014/எச்1

**தீர்மானம் எண்.1755 அஙகீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.2

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணி புரிந்து வரும் துப்புரவு பணியாளர்கள் ஆண்கள்–25, பெண்கள்–14 நபர்களுக்கும் துப்புரவு பணி மேற்பார்வையாளர் ஆண்கள் –3, பெண்–1 நபரும், தெருவிளக்கு பராமரிப்பு பிரிவில் 2 ஆண்களுக்கும், ஒட்டுநர் –3 ஆண்களுக்கும் அலுவலக உதவியாளர் – 1 நபருக்கும் மற்றும் மகப்பேறு உதவியாளர், மகப்பேறு ஆயா இருவருக்கும் 2017–18–ம் ஆண்டிற்கான சீருடைகள் நாகர்கோவில் எண்டைஸ் விற்பனை நிலையத்திலிருந்து அரசு விதிமுறைப்படி ஒரு நபருக்கு 2 ஜோடி சீருடைகள் வாஙகி வழஙகவும் அதற்கான தையல் கூலி வழஙகவும் உத்தேச செலவு ரூ.120000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.3027/2010/எச்1

**தீர்மானம் எண்.1756 அஙகீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.3

இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்கு தேவையான 33% குளோரின் அளவு கொண்ட பிளீச்சிங் பவுடரை 2017–18–ம் ஆண்டிற்கு கொள்முதல் செய்வதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.75,000/–க்கு மன்றம் தனது தீர்மானம் எண்.1628 நாள் : 30.03.2017 –ன் மூலம் ஒப்புதல் வழஙகியுள்ளது. அதன் அடிப்படையில் பிளீச்சிங பவுடர் கொள்முதல் செய்வதற்காக 24.08.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| | |
|---|---|
| 1.M/s. Jayapaba Traders, Thazakudy. | மதிப்பீட்டு விகிதம் (ரூ. 32/–) |
| 2. M/s. Sri Balaji Agencies, Krishnancoil | மதிப்பீட்டை விட 6.25% அதிகம் (ரூ. 34/–) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s. Jayapaha Traders Thazakudy நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வினியோக உத்தரவு வழஙகுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1110/2008/இ1

**தீர்மானம் எண்.1757 அஙகீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.4

இந்நகராட்சி கணிணி பிரிவில் பயன்பாட்டில் உள்ள 5 KVA மற்றும் 3 KVA UPS- களின் வருடாந்திர பராமரிப்பு காலம் (AMC) முறையே 02.11.2017 மற்றும் 05.11.2017–ல் முடிவடைந்து விட்டதால், அதனை புதுப்பிப்பதற்கான மேற்படி UPS - களின் உற்பத்தியாளரான Noveteur Electrical of digintal System Private Ltd., நிறுவனத்திடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி UPS - களின் வருடாந்திர பராமரிப்பு காலத்தை தொடர்ந்து வரும் ஓராண்டிற்கு கீழ்காணும் கட்டணத்தினபடி நீட்டிப்பு செய்வதற்கும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. 5 KVA UPS | - | Rs. 8850/- |
| 2. 3 KVA UPS | - | Rs. 6490/- |
| **Total** | **-** | **Rs. 15340** |

ந.க.எண்.3562/2007/அ2

**தீர்மானம் எண்.1758 அஙகீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் நவீன மீன் மார்க்கெட்டில் உள்ள கடைக்கு **16.11.2017–ல்** பொது ஏலம் நடைபெற்றதில் முதல் தளம் கடை எண்.2–க்கு கேட்டுள்ள ஏலம் விபரம் பின்வருமாறு,

**முதல் தளம் கடைஎண்.2**

| வ.எண் | பெயர் | கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி ரூ (ஒரு மாதத்திற்கு) | நகராட்சி பொறியாளர் ஏல நிர்ணயம் அரசாங்க மதிப்புத்தொகை | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கேட்ட ஏலத்தாரர் பெயர் மற்றும் தொகை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | எம்.மார்ஷல் பிரேனட் ஆலன் | 10,800/– | 10683/– | எம்.மார்ஷல் பிரேனட் ஆலன் 10,800/– – |
| 2. | அ.அப்துல் நசீம் | 10,700/– | – | |

மேற்படி கடைக்கு ஒப்பந்தப்புள்ளி எவரும் அளிக்கவில்லை. கலம் (5)–ல் கொடுக்கப்பட்டுள்ள அதிகபட்ச ஏலத்தொகையினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கலாம். அரசாங்க மதிப்பை விட வாடகை தொகை கூடுதலாக உள்ளது.

ந.க.எண்.216/2017/அ1

**தீர்மானம் எண்.1759 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

இந்நகராட்சி கண்காணிப்பு வாகனம் TN 75 K 6526–ல் பல்வேறு பழுதுகள் ஏற்பட்டு வாகனம் இயக்க இயலாத நிலை ஏற்பட்டதை தொடர்ந்து Mahindra & Mahindra–வின்அங்கீகாரம் பெற்ற M/s. Kodai cars private Ltd., Tirunelveli நிறுவனத்தில் வாகனத்தை பரிசோதனை செய்து ரூ.58,184/–க்கும், மேற்படி பழுது நீக்கப்பணியினை M/s. Kodai cars private Ltd., Tirunelveli நிறுவனத்தின் மூலம் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.7057–1/2011/இ1

**தீர்மானம் எண்.1760 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

அரசாணை (நிலை)எண்.360, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள் : 12.10.2017–ன் படி பிறப்பு மற்றும் இறப்பு பதிவு மேற்கொள்ளவும், சான்று வழங்கவும் புதிய கட்டணம் திருத்தி கீழ்கண்டவாறு உத்தரவிடப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விதி எண் | விபரம் | பழைய கட்டணம் | புதிய கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | 9(1) | காலதாமத பதிவு (21 முதல் 30 தினஙகளுக்குள்) | ரூ.2/– | ரூ.100/– |
| 2 | 9(2) | காலதாமத பதிவு<br>(30 தினஙகளுக்கு மேல் ஒரு வருடத்திற்குள் உரிய கட்டணம் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி) | ரூ.5/– | ரூ.200/– |
| 3 | 9(3) | காலதாமத பதிவு (ஒரு ஆண்டிற்கு மேல் உரிய கட்டணம் மற்றும் வருவாய் கோட்டாட்சியருக்கு குறையாத நிர்வாக நீதிபதி அவர்களின் அனுமதி) | ரூ.10/– | ரூ.500/– |
| 4 | 10(1) (a) | குழந்தையின் பெயர்/பதிவு கட்டணம் ஒரு ஆண்டிற்குள் | ரூ.2/– | ரூ.100/– |
| 5 | 10(1) (a)(b) | குழந்தையின் பெயர்/பதிவு கட்டணம் ஒரு ஆண்டிற்கு மேல் | ரூ.5/– | ரூ.200/– |
| 6 | 13 (1) (a) | பிறப்பு, இறப்பு சான்று மற்றும் பதிவில்லா சான்று பெற தேடுதல் கட்டணம் ஒரு ஆண்டிற்கு | ரூ.2/– | ரூ.100/– |
| 7 | 13 (1) (b) | கூடுதலாக ஒவ்வொரு ஆண்டிற்கும் | ரூ.5/– | ரூ.100/– |
| 8 | 13 (1) (c) | பிறப்பு மற்றும் இறப்பு சான்று வழஙக (முதல் நகல்) | ரூ.30/– | ரூ.200/– |
| 9 | 13 (1) (d) | கூடுதலாக ஒவ்வொரு நகலிற்கும் கட்டணம் | ரூ.30/– | ரூ.200/– |
| 10 | 13 (1) (e) | பதிவில்லா சான்று வழஙக | ரூ.2/– | ரூ.100/– |

ந.க.எண்.1836/2017/எச்1

**தீர்மானம் எண்.1761 அஙகீகரிக்கப்பட்டது.**